# திருவிவிலியம் கூறும் வாழ்வியல் அறங்கள்

***சு. பிரேமா***
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, பதிவு எண் : 20121244022010
சாராள்தக்கர் கல்லூரி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6490

***முன்னுரை***

*வாழ்க்கை வரலாறாகவும், வரலாறு இலக்கியமாகவும், இலக்கியம் வாழ்வின் ஒழுங்கு முறையாகவும் உருப்பெற்று வளர்வது என்பது வாழ்வியலின் முப்பரிமாண வளர்ச்சியாகும். வாழ்க்கையிலிருந்து நேரே முகிழ்த்து எழுவதே சிறந்த இலக்கியம் ஆகும். பிறப்பு முதல் இறப்பு வை மனிதன் எங்ஙனம் வாழ வேண்டும் என்பதற்கு இலக்கணம் வகுத்துத் தருவதே வாழ்வியல். வாழ்ந்த காலப் படிப்பினையை, வாழும் காலப் படிப்பினையாக மாற்றிக் கொடுப்பதால் திருவிவிலியம் இன்றும் வரலாற்று இலக்கியமாக வாழ்கிறது. அறம், சமூகம், வரலாறு போன்ற ஒவ்வொரு துறை பற்றிக் கூறும் செய்திகளெல்லாம் தொகுக்கப்பெற்று அறஇயல், சமூக இயல், வரலாற்று இயல் என்று அழைக்கப்படுவது போன்றே மக்கள் வாழ்வின் இன்றியமையாத இயல்புகளையும் சமூக ஒழுகலாறுகளையும் பற்றி செய்திகளே வாழ்வியல் எனலாம். "வாழ்க்கை என்பது உயிர் பிழைப்பதற்கான ஒரு போராட்டம் என்றாலும் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வரையறை செய்து கொண்டு, தான் மட்டும் வாழாமல் இவ்வையகமும் வாழ வேண்டும் என்ற பெரு நோக்கோடு வாழ்வதே மெய்வாழ்வு ஆகும்".[1] இம்மெய்வாழ்வு வாழ்வதற்கான ஆற்றலை மனிதர்க்கு அளிக்கும் ஊற்றாக விளங்குவது "அறம்" ஆகும்.*

## அறம்

அறம் என்னும் சொல் பல்வேறு பொருளை உணர்த்தும் பொருள் செறிவு வாய்ந்த சொல்லாகச் சிறப்புற்று விளங்குகிறது. "அறு என்னும் வினைச்சொல்லின் அடியாகப் பிறந்ததே அறம் என்னும் சொல்லாகும்".[2] மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்கமுறைகளின் முழுநிறை வடிவமே அறம்".[3] என்பதாகும். "ஒழுக்கம் மக்கள் உயிர்க்கு உறுதி பயப்பதால், தமிழ் அறநூல்களின் மணி மகுடமாகத் திகழும் திருக்குறள், ஒழுக்கமே அறம் என்கிறது."[4]. "எல்லோருக்கும் பயன்படக்கூடியது, எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியது. எதுவோ அது ஒவ்வொன்றுமே அறமாகும்."[5] அறம் என்பது மனத்தில் குற்றமில்லாமல் இருப்பது, சொல்லில் தூய செ ால்லல், உடலால் தூய செயல் - பிற அறமல்ல"[6]. "அறம் உயிருக்கு உறுதுணையாகும் அறத்தால் இன்பம் வரும். அறத்திற்கே அன்பு துணை செய்யும்"[7].

அறம் பற்றிய தம்முடைய கருத்தைப் பதிவு செய்யும் கெல்சன் அவர்கள், "அறம் என்பது அறிந்து கொள்ள முடியாத தெய்வீகமான மறைபொருள் ஆகும்"[8]. என்றும், "அறமே அறிவு, அறிவே அறம்"[9]. என்று சாக்ரிரட்டீசும், "அறத்தின் வழிவருவதே இன்பம் நன்மை, அறம் என்பதன் பொருளை ஓரளவு உணர இயலுமே தவிர முழுமையாக அறிய இயலாது"[10] என்று அரிஸ்டாட்டிலும் கூறுகின்றனர். "அமைதியும் - மகிழ்வும் இவையே அறங்களின் முன்னணியில் நிற்பன. இவையே முழுத் தூய்மையான கடமைகள் ஆவன"[11] என்று ஆர்.எஸ்.ஸ்டீவன்சன் அவர்களும், "தன்னைப் பிறருக்காக அளித்தல் எல்லாச் சமயங்களுக்கும் அழியாத அடிப்படை அது ஒன்றே நிலையான உண்மை அறம்."[12] என்று மாஜினி அவர்களும், அறத்தைப் பற்றிய தத்தம் கருத்துக்களைக் கூறுகின்றனர்.

## தமிழர் வாழ்வில் அறம்

"வாழ்க்கை வளமுடனும் இன்பத்துடனும் அமைய வேண்டுமெனில் அதற்கென்று சில வரையறைகள் இருத்தல் வேண்டும். இதைக் கருத்தில் கொண்டே நம் முன்னோர்கள் வாழ்வுக்கான அறங்களை வகுத்துச் சென்றுள்ளனர்"[13]. "தனிமனிதனும் சமுதாயமும் நலமாக வாழ்வதற்கும் சிறந்த மேம்பாடு அடைவதற்கும் அறவாழ்வு இன்றியமையாதது என்னும் நம்பிக்கை நம் முன்னோர்களிடம் நெடுங்காலமாக இருந்து வந்திருக்கின்றது."[14]. எனவே தமிழர் ஒழுக்கநெறியாக அறத்தைக் கருதினர். "அறம் என்னும் சொல் ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, புண்ணியம், ஈகை, அறக்கடவுள், சமயம் என்ற பல்வேறு பொருள்களை உள்ளடக்கிய ஒன்றாக வழங்கப்பட்டு வருகிறது.[15]. கடவுளின் திருவடிகளைப் பொருந்தி அவா, பொறாமை, வெகுளி போன்ற தீய உணர்ச்சிகளுக்கு உள்ளத்தில் இடம் தராமல் "யான்", "எனது" என்ற பற்றுக்களைத் துறந்து, கற்புடைய மனைவியோடு இல்லற நெறி நின்று வாழும் ஒழுக்க வாழ்வு அறம். பிறரோடு கூடி வாழும் சமுதாய வாழ்வில் பிறருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்து வரைவின் மகளிர், கள்ளுண்ணுதல், சூதாடுதல் போன்ற தீமைகளை விலக்கி ஈகையைப் போற்றி வாழ்வத அறம். குடிமக்கள் பால் அன்பு புண்டு, நீதி வழுவாத நெறி நின்று, நடுநிலை தவறாமல் நல்லாட்சி புரிவது அரசர்க்கு அறமாகும். அறிவும், பண்பும் உடையவராய், நற்செயல்கள் புரிந்து இசையோடு வாழ்ந்து, வாய்மையே பேசி, மறந்தும் பிறருக்குத் தீமை செய்யாமல் மெய்வாழ்வு வாழ்தலே தமிழர் தம் வாழ்க்கை அறமாகும். இவ்வாழ்வியலுக்கு அடிப்படையாக அமைவது இல்லறம் என்னும் நல்லறமாகும். இல்லற வாழ்வில் இனிமை காண்பதற்கு அன்பு இன்றியமையாததாகின்றது. "அன்பும் பண்பும் உடைய வாழ்க்கையே ஒரு கலையாகும்"[15] ஆக தமிழர் அறத்தை ஒரு கொள்கையாகவோ, கோட்பாடாகவோ, சமயமாகவோ கருதாமல் வாழ்க்கை நெறியாகவே கருதிப் போற்றினர்.

## திருவிவிலியமும் ஞானமும்

"தமிழர்களின் அறமும் எபிரெயர்களின் ஞானமும் புவி என்னும் கோளில் வேறுபட்ட திசைகளில் தோன்றியிருந்தாலும், நாட்டின் எல்லைகளால் மாறுபட்டிருந்தாலும், மொழியாலும், நாகரிகத்தாலும், வரலாற்றுப் பின்னணிகளாலும் வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் அவை ஒத்தத் தன்மை கொண்டவையாக விளங்குகின்றது"[17]. திருவிவிலிய மொழியான எபிரெயம் செமித்தியக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழி "தமிழ் திராவிட குடும்பத்தைச் சேர்ந்தது.[18] ஆயினும் ஒரே அறக்கருத்து இவ்விரு மொழிகளின் இலக்கண விதிகளாலும் மொழி மரபுகளாலும் மெருகிடப்பட்டு, மனித வாழ்வை நெறிப்படுத்துவதில் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. "தமிழர்கள் "அறம்" என்ற பெயரில் எத்தகைய வாழ்க்கை

முறையைப் போற்றினார்களோ அதனையே எபிரேயர்கள் "ஞானம்" என்ற பெயரில் போற்றினார்கள்"[19]. திருவிவிலியம் கூறும் ஞானம் மிகவும் கருத்தாழம் கொண்டது. கடவுளிடம் கொள்ளும் பயபக்தியே ஞானம் ஆகும். கடவுளே ஞானத்தின் ஊற்று "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்" கடவுள் தம் படைப்பின் தொடக்கத்திலேயே ஞானத்தைப் படைத்தார். உலகத்தைப் படைத்து அதை அடித்தளமிட்ட போதும் ஞானம் அவருடைய சிற்பியாகச் செயல்பட்டது".

**"ஞானத்தைத் தேடி அலைந்தோர் நற்பேறு பெற்றோர்"**
**மெய்யறிவை அடைந்தோர் நற்பேறு பெற்றோர்**
**வெள்ளியை விட ஞானமும் மிகுநலன் தருவது பொன்னை**
**விட ஞானத்தால் வரும் செல்வம் மேலானது ஞானம்**
**பவளத்தை விட விலை மதிப்புள்ளது"[20]**

ஞானம் நீடிய ஆயுளையும் "செல்வத்தையும், மேன்மையையும், இன்பத்தையும் அளிக்கிறது. அது வாழ்வு தரும் கற்பக தரு. மக்கள் மக்களாக வாழ அறவாழ்க்கை, அன்பு, வாழ்க்கை, நன்னெறி வாழ்க்கை என்றெல்லாம் பல்வேறு வாழ்க்கை வகைகளைச் சுட்டும் நூல்கள் பல இருக்க, வாழ்க்கையே ஞானம், வாழ்க்கையே அறம், வாழ்க்கையே அன்பு, வாழ்க்கையே நெறி, வாழ்க்கையே அறிவு, வாழ்க்கையே நித்திய வாழ்வுக்கு வழி என்ற தத்துவங்களை எடுத்தியமபும் நூலாகத் திருவிவிலியம் திகழ்கிறது. இது இஸ்ரவேல் மக்களின் வாழ்வின் பொருளாக விளங்கும் அறத்தை ஞானம் என்றே வலியுறுத்து கின்றது. நன்மையை நாடுவது ஞானம் நீதியை நாடித் தேடுவது ஞானம் இரக்கம் கொள்வது ஞானம் தருமம் செய்வது ஞானம் இறை அச்சம் கொள்வது ஞானம் மறைவாக செபிப்பது ஞானம் தீமைக்கு விலகியிருப்பது ஞானம் கைம்பெண்ணுக்காக வழக்காடுவது ஞானம் என விவிலியம் முழுவதும் ஞானக்கருத்துக்கள் மிளிர்ந்து நிற்கின்றன.

**"அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது**
**பொன்றுங்கால் பொன்றாத்துணை"[21]**

பின்னே செய்யலாம் என்று காலம் தாழ்த்தாமல் உடனே அறம் செய்தல் வேண்டும். ஏனெனில் அவ்வறமே இறக்கும் பொழுதும் இறவாத துணையாக இருக்கும்"[22] என்று வள்ளுவர் கூறுகிறார்.

**"நன்று செய்வதற்கு உடன்படு வாயேல்**
**நல்ல நெஞ்சமே, வல்ல இவ்வண்ணம்**
**இன்று செய் தீ நீ நாளை என்பாயேல்**
**இன்றிருந்தவர் நாளை நின்றிலரே"[23]**

என்று அறன் வலியுறுத்துகிறது திருவருட்பா. விவிலியமோ உன் களஞ்சியத்தில் பொன்னையும், பொருளையும் சேர்த்து வைத்து இவ்வுலகில் இன்பத்தோடும் பேருவகையோடும் வாழத் துணியாமல்

**"உன் களஞ்சியத்தில் தருமங்களைச் சேர்த்து வை அவை**
**எல்லாத் தீமையினின்றும் உன்னை விடுவிக்கும்"[24]**

**"அடுத்திருப்பார் உன்னிடம் கேட்கும் பொருளை நீ**
**வைத்துக்கொண்டே, போய்வா நாளைக்குத் தருகிறேன் என்று சொல்லாதே"[25]**

என்கிறது விவிலியம். பெற்றோருக்குக் கீழ்ப்படிதல், நீதியையும் , நியாயத்தையும், நலமார்ந்த நெறிகளையும் தெரிந்து கொள்ளுதல், வஞ்சக நெஞ்சினர்க்கு விலகி இருத்தல், அன்பையும், வாய்ப்பையும் அணிகலனாய் அணிதல், விவேகத்தை முன் மதியாகக் கொண்டு வாழ்தல், சோம்பலை அகற்றி, பொறாமையின்றி உள்ளத்தைக் காத்துக்கொள்ளுதல், கற்பு நெறி கொண்ட மனைவியுடன் மகிழ்ந்திருத்தல், தேனொழுகப் பேசும் விலை மகளுக்கு விலகியிருத்தல் ஞானமாகும்.

பிறர் பொருளைக் கவராமலும், பிறர் மனைவியை நயவாமலும், எதிரியை மன்னித்து உதவுதலும், ஒடுக்கப்படுவோருக்கு உதவி

செய்வதும், திக்கற்றோருக்கு நீதி வழங்குவதும் ஞானமாகும். ஆக ஞானத்தை வெறுப்போர் சாவை விரும்புவோர் ஆவர். அதைத் தேடி அடைவோர் ஆண்டவரின் அருளையும் ஆசியையும் பெறுவர் என விவிலியம் முழுவதும் ஞானக் கருத்துக்களே மிகுந்து நிற்கின்றன.

**கூடா ஒழுக்கம்**

கடவுள் குடும்பங்களை இரண்டு காரணங்களுக்காக உருவாக்கினார். ஒன்று கணவனும் மனைவியும் தங்களுடைய திருமண உறவிலே பிணைக்கப்படுவது. மற்றொன்று இவர்கள் துணையால் புதிய சமுதாயம் படைக்கப்படுவதுமே ஆகும். இதுதான் இறைவனின் திருவுளம். இதற்கு மாறுபாடான உறவுகளைப் பாவம் என்றும், கூடா ஒழுக்கம் என்றும் பரத்தமை என்றும், விபச்சாரம் என்றும் விவிலியம் கூறுகின்றது.

"உடல் பரத்தமைக்கு அல்ல ஆண்டவருக்கே உரியது"[26] விபச்சாரம் செய்வதும் மட்டும் குற்றமன்று இத்தகைய பாவச் செயலுக்குத் தூண்டும் இச்சைகளை அகற்றுவதிலும் திவீரமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இன்னும் குறிப்பாகப் பெண்களை மதிக்க வேண்டும். மனைவியை சுயநலத்திற்காக மட்டும் பயன்படுத்தாமல் மனித நேயத்துடன் நடத்தக் கற்றுக் கொள்ள வேண்டும். யுத மக்களிடையே மிக எளிதாகப் பின்பற்றப்பட்ட மனமுறிவையும், உலகு சார்ந்த உடல் ஆசை, இச்சை நிறைந்த பார்வையை வன்மையாகக் கண்டிக்கிறது.

களியாட்டம், குடிவெறி, கூடாவொழுக்கம், காமவெறி , சண்டை சச்சரவு ஆகியவற்றைத் தவிர்போமாக"[27]

"பந்தயத்தில் ஓடுகிறவர்கள் எல்லா வகையிலும், தங்களையே ஒடுக்குவது போலத் தன்னடக்கத்தோடு வாழ்ந்தால் தான் நித்திய வாழ்வை அடைய முடியும்"[28] என்கிறார் பவுலடிகளார்.

**முடிவுரை**

வாழ்க்கையின் நெறியை, வாழும் முறையை நல்லந்துவனார் கலித்தொகைப் பாடலில் மிக அழகாக வடித்துக் கொடுத்துள்ளார். வாழ்க்கை என்பது எப்படியெல்லாம் வாழ்வது என்பதில்லை. இப்படிதான் வாழ வேண்டும் என்பதை வரையறுத்துக் கொண்டு வாழ்வது. அவ்வாழ்க்கைக் கலையினை அறிந்து நாம் வாழ்ந்தால் மண்ணுலகம் பொன்னுலகமாக மாறும் என்று விவிலியம் எடுத்துரைக்கிறது. ஒழுக்கத்தை வருந்தியும் போற்றிக் காக்க வேண்டும். பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தெளிந்தாலும் அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்கும்.

**துணை நூற்பட்டியல்**


1. ஆச்சாரியா. பி.எல், திருக்குறள் 1330 மூலப்பாடல்களும் தெளிவான விளக்கவுரையும், நர்மதா பதிப்பகம், தியாகராய நகர், சென்னை.
2. தமிழ்நாடு விவிலிய, திருவிவிலியம் (பொதுமொழிபெயர்ப்பு), ஆணைக்குழு, கத்தோலிக்க இலக்கிய மையம், திண்டிவனம், பதிப்பு ஆண்டு 1995
3. பரிமேலழகர், திருக்குறள் பரிமேலழகர் உரை, ராம் பிரசுரம், மண்ணடி, சென்னை, முதற்பதிப்பு டிசம்பர் -2003
4. பால் வசந்த குமார், திருவிவிலிய ஞான இலக்கியங்களும், கீழ்க்கணக்கு நூல்களும்
5. க.த. திருநாவுகரசு, திருக்குறள் நீதி இலக்கியம்